(b) if so, the steps taken to prevent them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir. In one school only.

(b) Necessary action is being taken against the Manager.

SRI T. S. RAMASWAMI : May I know the nature of the steps taken?

THE HON. SRI C. SUBRAMANIAM : Explanation has been called for from the Manager for the various irregularities.

Breaches in Madakulam tank (Madurai)

* 843 *Q.*—SRI M. P. SARATHI :
SRI N. R. THIAGARAJAN :
SRI P. K. MOOKIAH THEVAR : } கனம் பொது

மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகர் அருகேயுள்ள மாடக்குளம் சமீபத்தில் பெய்த மழையினல் உடைப்பு எடுத்ததனல் எவ்வளவு சேதம் ஏற்பட்டது ?

(இ) அதனல் பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டது ?

(உ) அந்தக் குளத்தின் மதகுகள் எதுமுதல் திறந்து வைக்கப்பட்டன ?

THE HON SRI P. KAKKAN : (அ) Rs. 27,000 to Government by way of repairing the flood damages to the tank and Rs 79,159 to private property like huts including damage of Rs. 2,000 to crops.

(இ) Cash grant ranging from Rs. 10 to Rs. 30 each and amounting to Rs. 27,705 were given by the Government to the victims. The flood affected poor persons were also fed by individuals, institutions and the Municipality.

(உ) From July 1960.

SRI M. P. SARATHI : ஸார், இந்த உடைப்பு எடுப்பதற்கு காரணம் என்ன? உடைப்பு ஏற்படுவதற்கு முன்னே இதை ஏன் சீர்படுத்தவில்லை ?

THE HON. SRI P. KAKKAN : பெரும் மழை பெய்து அதில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக இந்த உடைப்பு எடுத்திருக்கிறது. ஏற்கனவே கட்டப்பட்ட புதிய கண்மாய்க்குப் பக்கத்தில் எலிகளின் தொந்தரவுகளின் காரணமாக துவாரம் ஏற்பட்டு அதன் மூலம் லீக்கேஜ் எடுத்து உடைந்திருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : ஸார், மதுரைக்கு மேற்கே இருக்கும் இந்த மாடக்குளம் ஏரி உடைந்தால் மதுரை நகரம் பாதிக்கப்படும். அந்த ஏரியிலிருந்து தண்ணீர் வெளியேறும்.

15th March 1961]

மதகு மிகவும் சிறியதாய் இருக்கிறது. ஆகவே இன்னொரு புதிய மதகு ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் தண்ணீர் போவ தற்கு ஏற்படுத்தி மழை காலத்தில் இரவு நேரங்களில் காவல் போட்டு, அதன் மூலம் தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

THE HON. SRI P. KAKKAN : நான் அந்த இடத்தில் போய் பார்த்தேன். இதனால் மட்டும் உடைப்பு ஏற்படும் என்று தோன்ற வில்லை. இருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனைகளையும் அதிகாரிகளுடன் கலந்து பரிசிலிக்கலாம்.

SRI S. M. ANNAMALAI : ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர். ரெவின்யூ அமைச்சர் அவர்களால் மேஜைமீது வைக்கப்பட்டி ருக்கும் அறிக்கையில் மாடக்குளத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக 1,651 குடிசைகள் சேதமடைந்தன என்றும் அதற்காக 26,115 ரூபாய் செலவு செய்ய ஒதுக்கியிருப்ப தாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் இப்போது மராமத்து அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலில் 27 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இவர்களுக்குள்ளே இந்த முரண்பாடு ஏற்படுகிறது ? இது சரிதானு என்பதை கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : இப்போது மராமத்து அமைச்சர் அவர் களிடத்தில் கேட்ட கேள்விக்கு அவர்கள் சொன்ன பதில் சரி.

Cycle factory (Thanjavur)

* 844 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சையில் சைக்கிள் தொழிற்சாலை உற்பத்தி எப் போது துவங்கும் ?

(இ) இங்கு ஆண்டுதோறும் எத்தனை சைக்கிள்கள் செய்யப் படும் ?

(உ) எத்தனை தொழிலாளர்களுக்கு இதில் வேலை கிடைக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The bicycle Assembly Unit, Thanjavur is expected to go into production in about three months time or even shorter than that.

(இ) The anticipated production capacity of the Unit is 5,000 bicycles per annum.

(உ) About fifty workers are likely to be employed when the Unit commences production.

SRI A. VEDARATHNAM : இந்த தொழிற்சாலையில் என் னென்ன மாதிரியான சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படும் ? அதிலிருந்து ஆண்டுதோறும் எதிர்பார்க்கப்படும் வருமானம் என்ன ?